# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ஆம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ce. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுசு] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ பங்குனி மீ ௪ உ செவ்வாய்க்கிழமை (17 March. 1953) [இல - கூ உ


# நோய் வாராது வாழ்வதற்கு வழி

## விருப்பு வெறுப்பில்லா நிலை

நம்முடைய உடம்பின் கண்ணுள்ள வாத பித்த கபமென்னும் தோஷங்களை ஒழிக்க முயல்வதுபோல, நம்முடைய மனதின்கண்ணுள்ள மலம், விட்சேபம், ஆவரணமென்னும் தோஷங்களையும் நாம் ஒழிக்க முயலுகின்றோமில்லையென்பது, நம்முடைய செயல்களைச் சிறிதுன்றி நோக்குவோல் நன்கு விளக்கும். வாதத்தாலோ (வாயுவாலோ) பித்த (உஷ்ண)த்தாலோ, கபத்தா (சிதளத்தா)லோ நோய் பெருகிய விடத்து நாம் என்ன செய்கின்றோம்? இந்நோய் எவ்வாறொழியும்? தக்க மருத்துவர் எங்கே யிருக்கின்றாரென்று ஆலோசித்து தேட முயலுகின்றோமென்பதற்குச் சந்தேகமில்லை! இவ்வாறு முயலுவதற்குக் காரணம் இவ்வியாதியால் இறந்துவிடுவோமோ என்னும் பயமேயாம். மண்சுவரை எத்தனை முறை கழுவினாலும், அதன்கண்ணுள்ள அழுக்கு நீங்காமை போல, நாம் எத்தனை முறை மருந்துண்டாலும் நம்முடம்பின் கண்ணுள்ள நோய் ஒழிவதேயில்லை. நோய் தீர்த்ததென்பதன் பொருள் நோய் அடங்கியிருக்கின்றதென்பதன்றி, அது முற்றும் நீங்கிப்போயதென்பதன்றாம்! ஆதலால் இந்த நோய்கள் வாராது வாழ்வது எவ்வாறுமென்பது பற்றி நாம் பெரிதும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும்.

விருப்பும் வெறுப்புமில்லா நிலைமையில் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவோமாயின், நாம் நோய்கள் கிழுவதற்கிடமாகிய

.................................

தென்னாபிரிக்கா, டர்பன்
திரு. ச. மு. பிள்ளை அவர்கள்

.................................

உடம்பின் கண் நோய் வாராநெறியைப் பெறுதற்குரியவராவோம். விருப்பும் வெறுப்பும் இராப்பகல் போல நம்மிடத்து வந்து நம்மைப் பல வகைக் கிலேசங்களுக்கு அடிமையாக்குகின்றன. அவற்றால் நாம தேக தேகிகளின் உண்மையை யுள்ளவா றுணர்தற்குரியவராகாது, தேகமே ஆத்மாவாமெனத் தீர்மானித்து, அது நோயின்றி யிருக்க வேண்டுமென்று முயலுகின்றோம். அம்முயற்சி முற்றும் பயன்படுவதில்லையென்பதற்கு நமதனுபவமே தக்க சான்றாகும். நாம் அனுகூலப் பொருளில் விருப்பும், பிரதிகூலப் பொருளில் வெறுப்புமுடையவராகவிருக்கின்றோம். அவ்வாறிருத்தலால் நமது புத்தி தெளிவடையாதிருக்கின்றது; அதனால் மோகத்தை யுடையவராய் மனத்தின் கண்ணுள்ள மலம் விட்சேபம், ஆவரணமென்னும் தோஷங்களை யொழிப்பது பற்றி அற்பமாக வேனும் முயலாதிருக்கின்றோம்.

### அகத்தூய்மை அவசியம்

வாக்குச் சுத்தம், காயச் சுத்தம், மனச் சுத்தமென்னும் மூன்றும் நமக்கின்றியமையாது வேண்டுவனவாம். வாக்குச் சுத்தமாவது, தனக்கும் பிறர்க்கும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதலாம். காயச் சுத்தமவது, மருத்துவ நூல் கூறியவாறொழுகுதலால், காயம் நோயிலாதிருத்தலாம். மனச் சுத்தமாவது மனம் மலம், விட்சேபம், ஆவரணமென்னு மூன்றுமில்லாதிருத்தலாம், இவற்றுள் மனச் சுத்தமே இனிப் பிறவா நிலையினை யடைதற்குப் பரம சாதனமாயிருப்பதாம். இச் சுத்தி சித்திக்காதவளவும் பிறப்பு ஒழிவதில்லையாம். பிறப்புள்ளவளவும வாத முதலிய நோய்கள் ஒழி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## அன்று மதிவளம் நிறைந்த தமிழினமே!

### இன்று வாழ்க்கை முறை வயிற்றினுக்காய் விட்டதுவே!

மண்ணகத்தே மாந்தரெலாம் போற்றிநிற்கும்
  மருவரிய சிறப்பதுசேர் தமிழினமே
எண்ணகத்தே நினைக்கவொணு அருமைசாலும்
  எழில்நிறைந்த வனப்புசெறி காவியமும்
விண்ணகத்து வானவரும் மனத்திலூன்றி
  விழைந்துமிகக் கேட்டுருகும் இசைப்பெருக்கும்
தண்ணகத்தே ஒளிர்ந்துநிற்கும் நாடகமும்
  கருத்துவைத்தே முன்னோர்கள் பெருக்கினர்கள்.

( கலாநிதி க. கணபதிப்பிள்ளை ஆக்கியது )

*   *   *   *

பண்டைநாள் தமிழகத்தில் இருந்தமாந்தர்
  பான்மைசெறி குறிக்கோள்கள் பொருந்தியோங்கிக்
கொண்டுதான் வாழ்ந்தனர்காண் துவலயத்தில்
  கோதிலரு ஞானநெறி திகழ்ந்துசார
மண்டியிங்கே ஆரியர்கள் வந்ததற்பின்
  வாழ்க்கைமுறை வயிற்றினுக்காய் விட்டதையோ
அண்டுமயர் கருத்துக்கள் தத்துவங்கள்
  அருங்காற்றிற் போய்ப்பறந்தே ஒளித்தனபார்.

*   *   *   *

அந்நாளிற் தெய்வமொழி யென்றுகூறி
  அருங்காட்டுச் சங்கதத்தை பரிந்துதந்தார்
இந்நாளில இந்தியெனு மொழிதன்னால்
  இலங்குவட நாட்டுமொழி தம்மையெல்லாம்
மன்னுதே அழித்திடவும் தமிழ்தெலு து
  மாறது நசுக்கிடவும் விழைகின்றார்
ஒன்னுது தமிழ்தொலைக்கச் சிங்களமென்
  றேர்துறவி விடுகின்றார் ஈழநாட்டில்.

## திருமுறையில் வரும் பட்டினத்தடிகள் யார்?

### மற்றையவர்கள் பாக்கள் எவை?

**பதினொராந் திருமுறை தரும் சான்று**

இனி, ஈண்டுப் பதினொராந் திருமுறையிலுள்ள பட்டினத்தார் பாடல்களை நோக்குவோம். கோயில் எனப்படும் சிதம்பரம், திருக்கழுமலம் எனப்படும் சீகாழி, திருவிடைமருதூர், திருவேகம்பம் எனப்படும காஞ்சி திருவொற்றியூர் என்ற ஐந்து தலங்களையே பட்டினத்தார குறித்துள்ளார் என்பது அவர் பாடியுள்ள ஐந்து நூல்களின் பெயரைக் கேட்பார்க்குத் தோன்றுமாயினும், ஏனைய தலங்களையும் அவர் குறித்திருப்பது திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் காணலாம் எனவே அவர் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொ

... ஞானசம்பந்தம் ...

டங்கி, திருவைந்தெழுத்து, ஓங்காரம், மஹாவாக்கியம் இவரறின் உண்மைப் பொருளைக் குருவருளால் உணர்ந்து, மெய்யுணர்வு பெற்றுப் பேரின்பம் உற்றார் என்பது உறுதி

திருவைந்தெழுத்தைச் சிந்திப்பதனால் இம்மையின்பமும் மறுமையின்பமும் ஒருங்கே எய்தலாம் என்னும் உண்மையை அவர் உணர்த்தி [illegible] [illegible] அருளிச்செய்துள்ளும் இடம் (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை பா. 19) தெவிட்டாத இன்பந் தருவதாகும்.

"புண்ணிய புராதன......திருவிடைமருத!...இவ்வுலகில் பலபல மாக்கள், மக்கள் மனைவி சுற்றத்தார் இவர்களை விட்டு, வீடும் பிறவும் துறந்து, காடும் மலையும் புகுவர்; கோடையில் கைகளை மேல் நிமிர்த்தும், ஒருகாலை முடக்கி, ஒரு காலினால், உச்சியின்மேலும் நான்கு பக்கத்தும் சுடும் ஐவகை நெருப்பின் நடுவில் நிற்பர்; மாரிநாளிலும், நீண்ட பனி நாளிலும் நீரில் மூழ்கி நெடிது இருப்பர். சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும், உடையைத் துறந்தும உண்ணாது உழன்றும், காயும், கிழங்கும், சருகும், வாயுவும், எதிர்ப்பட்டன அருந்துவர் கனரிலும், கல்விலும் கண்துயில்வர். இயல்பினாலேயே நாளுக்குநாள் தளர்ந்து தேய்வுறும் யாக்கையை இவ்வாறெல்லாம் தளர்வித்து மறுமையில் முத்தி எய்துதற்காகத் தம்மைத்தாமே சாலவும துன்புறுத்திக்கொள்வர்."

"உன் திருவடியையே சிந்தித்து வாழும் யாங்களோ, இவையெல்லாம் செய்யாமல், அழகோடு உயர்ந்த எழுநிலை மாடத்தும், பூங்காவகத்தும், தென்றல் இயங்கும் முற்றத்தும், சித்திர மண்டபத்தும், பூந்தடாகக் கரையிலும் செய்குன்றிலும் தங்கி. பஞ்சணையில இயற்

தொடர்ச்சி 3 ம் பக்கம்

## நலங்கொள் நாம நமச்சிவாயவே...!

திருச்சிற்றம்பலம்.

இலங்கை மன்னனை யெடுத்த வடுக்கண்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரனூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்.

**நாவலர் மண்டபத்தில்**

## சைவ - சித்தாந்த முத்தி நிலைத் தெளிவு

### தத்துவத் தோற்றமும் முத்திவழியும்

சிவஸ்ரீ ஈசானசிவாசாரியருடைய தெய்வீகப் பிரசங்கம் நின்றுவிட்டதேயெனப் பலர் வருந்த முன் சைவபரிபாலனசபையார் பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களைக் கந்தபுராணத்தில் ஞாயிறுதோறும் பிரசங்கம் செய்ய ஒழுங்கு செய்ததற்கு யாழ்ப்பாணம் பெரிதுங் கடமைப்பட வேண்டும். பண்டிதரவர்களுடைய பிரசங்கம் இரண்டுநாள் நடைபெற்றது. இன்னும் பல நாள் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இடையே திருவள்ளுவர் தினமுங் கொண்டாடப் பெற்றது. பண்டிதர் சிவஸ்ரீ இரத்தினேசுர ஐயரவர்களும் வேறு பலரும் பேசினார்கள். ஐயரவர்கள், "திருவள்ளுவருஞ்சைவமும்" என்ற விஷயத்திற் பேசும்பொழுது உட்சமயம் ஆறும்கொண்ட முடிபுகளை யுங்கடந்து அப்பாலுள்ளதே, சைவ சித்தாந்த சமயத்தின் முடிபு. இது சொல்லும் முத்தி நிலை அகச்சமய மாறும் வெவ்வேறாய்ச் சொல்லும் முடிபுகளை, நிராகரித்துத் தன் நிலை உச்சப்படியிலுள்ளதென்று ஆதாரங்காட்டிச் செவியறிவுறுத்தினர். இந்த முடிபு பண்டிதரவர்கள் இரண்டாம் நாள் காட்டிய முடிபிற்கு மாறு. இவர்கள் அகச்சமயம் ஆறும மோட்சத்திற்கு வழிகள் சைவசித்தாந்த சமயமும் அவைகளிலொன்று. எனவே அவைகள் முடியுமிடத்திற்றான் சைவ சித்தாந்தமும் முடியும் என்றார்.

இத்தப் பண்டிதர்கள் இருவருங் கொண்டிருக்கும் முடிபுகள் வெவ்வேறென்பது தெளிவு. சைவ சித்தாந்தமென்று பொதுவாய் சொல்லப்பெறும் சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயத்தின் முத்தி நிலை தெளிவாக, மலைவற விளக்கப் பெற்றாலொழியச், சாதனை செய்ய முடியாதாகையால் சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக அவசியந் தெளிவாக்கப்பட வேண்டும்.

x x x

பண்டிதர் சிவஸ்ரீ. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் திருவள்ளுவர் திருநாள் வைபவத்திற் பேசும்பொழுது ஆகாய தத்துவத்திலிருந்து ஏனைய நான்கு பூதங்கள் தோன்றினவென்று வேதங்கள் சொல்லுகின்றனவென்றும், அதே பேச்சில் வேறோரிடத்தில், பஞ்சதன் மாத்திரைகளிலுமிருந்து பஞ்ச பூதங்களுந் தோன்றினவென்றுஞ் சொன்னார்கள்.

இவைகளில் எது சரி? எனத் தெளிவாக்கப்பட வேண்டும்.

x x x

பண்டிதர் ஸ்ரீமத். சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஷு பங்குனி மீ
௪உ செவ்வாய்க்கிழமை

## அண்ணாதுரை ஆபாசம்

மனிதகுல மாமேதை என்று தோழர் ஸ்டாலினைத் தமிழ் நாட்டுத் தோழமைக் குழுவினர் தொழுது போற்றினர்கள் என்றுற் புரட்சிப்பேர்வழி அண்ணாதுரையை அன்னவர்கள் எண்ணுக என்ன தான் சொல்லி ஏற்றமாட்டார்கள்?

வாய்மைக்கு, நேர்மைக்கு, மாண்புக்கு, நெறித் தூய்மைக்கு மாறாக எவராவது ஒருவர் எழுதினல் சொற்பெருக்காற்றினல் அவர் புரட்சி வீரர் ஆகின்றார். அவர் சீர்திருத்தவாதி என்ற புனை நாமத்தைத் தாமே தமக்குச் சூட்டிவிடுகின்றார்.

அரசியலிற் பொதுவுடைமையென்ற ஒரு புதுமை கொணர்ந்தார்கள் மேனாட்டுப் பயங்கரப் புரட்சிக்காரர். கொள்கைக்கு மாறானவர்களைக் கள்ளமாக இருந்தவிடம் தெரியாது எமன்கையிற் கொடுத்துவிடும் படுகொலைக் கொடுஞ் சூழ்ச்சியைக் கையாண்டு வந்த, வருகின்ற செம்படைத் தறுகணாளர்களைப் பின்பற்றி இப்போது மதவியலிலும் பொதுவுடைமையைப் புகுத்தத் துணிந்துநிற்கும் புரட்சிக்காரர்களின் பரபரப்பை என்னென்றுரைப்பது. கண் சிவக்கப் பேசுவார்கள், கருத்தழித்து எழுதுவார்கள் மார்புதட்டிச் சொற் பெருக்குவார்கள், வசைமாரி சொரிந்து உரைவழங்குவார்கள். கண்டனக்காட்டேறுகளாம்!

எழுதுவதும் பேசுவதும் எதைப்பற்றி? இறையடியார்கள் அப்பர் சுந்தரர் சம்பந்தர் மணிவாசகப் பெருந்தகையார்கள் போன்று அறமொழி பகர்வார்களா? என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பார்களா? வழுக்கிவிழினும் நின்திருப் பெயரல்லால் என்று மதிமொழி கூறுவார்களா? 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்று ஆணவ நினைப்பை ஒழிக்க நல்லுரை சொல்வார்களா? அவ்வாறு பேச எழுத அறிவிருந்தால் அல்லவோ முடியும்! வேதாகம புராண இதிகாசங்களை எடுத்துக் குருவியாராய்ந்துவிட்டார்களாம்! அசம்பாவிதங்கள் கண்டுவிட்டார்களாம்! இவற்றையெல்லாம் "கட்டுக்கதைகள் என்றும் அண்டப்புளுகுகள்" என்றும் எண்ணுது சொல்லி விடுவார்கள் அண்ணுக்கள்! பெரிய புராணம் கட்டுக் கதை என்றுரை செய்துவிட்டால் வருங்கால வீரர்களாய் விடுவார்கள் என்று மமதை கொள்கின்றார்களே!

தமிழ் அறிஞர்களாம்! ஆனல் இந்த அமுதமொழி அழகை, அமைப்பை, அலங்கார அணியை என்னென்று ஆராயாது பழைய பனுவல்களை யெல்லாம் எள்ளிநகையாடத் துணிந்த இவர்கள் துணிபுக்குவமை நாம் சொல்லிக் காட்ட வேண்டியதில்லை.

இந்த ஆபாசக் கூற்றுக்களையும் அவற்றை ஆக்கிப் பாமர மக்களின் மனத்தை நயவஞ்சகமாக மாற்றிப் பொதுவுடைமை நாட்ட விரும்பி நிற்கும் மனித குலத்துரோகிகளின் மடைமையையும் தொடர்ந்து இப்பத்திரிகை வாயிலாகச் சைவத் தொண்டாற்றப் பெரியோர்கள் பன்முறை முயன்றும் இட வசதியின்மையால விடுத்தாம். இனி அப்பணியில் ஈடுபடுவாம்.

தொடர் கதை

மரஞ்செடி ஒவ்வொன்றும் உருவத்தில்
பாதி மிருகமும் பாதி தாவரமுமாயிருந்தன

## ★ நீரர மங்கையர் ★

— 10 —

இங்கு இவ்வாறு நடக்கும் போது நிலவுலகில் யாரோ ஒருவன் காட்டிலே வேட்டையாடும் ஆரவாரத்தினல் உண்டாகும் ஒலியொன்று நீருக் கூடாகச் சென்று அவள் காதில் விழுந்தது. உடனே அவள் இது யார் எழுப்பிய ஒலி என்பதை அறிந்தனள். யாரை யான் தாய் தந்தையரினும் மேலாக காதலிக்கின்றேனே, யாரிடம் என் எண்ணமெல்லாம் எப்போதும் குடிகொண்டு இருக்கின்றதோ, யாரிடம் என் வாழ்க்கை இன்பத்தை அடைய எண்ணி இருக்கின்றேனே — அவரே இப்பொழுது மேலே நிலவுலகில் வேட்டையாடுகின்றார். அந்த ஆர்ப்பாட்டத்தினல் எழும் ஒலிதான் இது, என்று முடிவு கட்டினள்.

இந்த விதமாக எண்ணிக்கொண்டு அவள் ஆழ்ந்த துயரோடு சிறிது நேரம் இருந்தனள் இறுதியில்பின் வருமாறு எண்ணுவள். "....எவ்வழியாலும அவரை அடைந்து ஓர் அழிவில்லா உயிரைப் பெறுவதற்குத் துணிந்து கொண்டேன் இது திண்ணம். ஆனல் எப்படி அதைச் செய்து முடிப்பேன்? என்றாலும் என்ன செய்வது? அவளிடம் போனுற்றான் என் ஆசையை நிறைவேற்றுதற்கு வேண்டிய வழிவகை கண்டு பிடிக்கலாம".

இங்ஙனம் எண்ணி மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவள் தனது தோட்டத்தினின்றும் வெளியேறிச் சூனியக்காரி வசிக்கும் நீர்ச்சுழியை நோக்கிப் புறப்பட்டாள் இதற்குமுன் அவ்வழியால் அவள் ஒருநாளும் போயறியாள். அந்நீர்ச்சுழியில் பூவாவது நீரில் வளரும் புல்பூண்டாவது இல்லை அந் நீர்ச்சுழியை அடையும்வரையில் மங்கல் நிறமான மணலைத்தான் அங்கு காணலாம ஓர் எந்திரத்தின் சில்லு நீரைக் குட் சுழலும் போது நீர் எவ்விதம வட்டமிட்டு வேகமாய்ச் சுழலுமோ அவ்விதமே அங்கும் அது சுழன்றுகொண்டிருந்தது. அதுமட்டுமன்றி அது ஒவென்ற ஓசையோடு வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. சிக்கிய யாவற்றையும் கடலின் அடிக்கு இழுத்துச் சென்றது. சூனியக்காரியின் இருப்பிடத்தை அடைவதற்கு அச் சிறுமி இப்பயங்கரமான நீர்ச்சுழியைத் தாண்ட வேண்டும். அதன பின் குட்டிஞற்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

ஓகோ, நன்று, நன்று, இங்கு வாழும் சூனியக்காரியிடம் போவேன். அவள் இதற்கு ஏதும் வழி கூறுவாள். அவளிடம் யான் போவது யாருக்காவது தெரியாது இருத்தல் வேண்டும். என் சகோதரியர் இப்போது மாளிகைக்குள் நின்று நடனமாடுகின்றனர். ஆகவே அவளிடம தனிமையாகச் செல்வதற்கு இதுதான் தக்க நேரம் சூனியக்காரியை நினைக்க எனக்குப் பெரிய அச்சம வருகின்றதுதான்.

## வண்ணை வைத்தீசுவரசுவாமி கோவில் விபரம்

பங்குனி மீ ௨௨௨ (25-3-53) புதன்கிழமை இரவு புஷ்பப் பல்லக்கு.

வியாழக்கிழமை இரவு விருஷப வாகனத்துடன் பெரியசப்பரம்.

வெள்ளிக்கிழமை 4 மணிக்கு பிக்ஷாடனேற்ஸவம் இரவு குதிரை வாகனம்.

சனிக்கிழமை காலை 11 மணிக்கு உதயசக்திஸ்கந்தசமேத சோமாஸ்கந்த மூர்த்தி முதலான பஞ்சமூர்த்திகளும் பஞ்சாதாரோகணம். இரவு ரதாரோகணப் பிராயச்சித்தம்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு சிவகாமசுந்தரி சமேத நடேசமூர்த்திக்கு மகா அபிஷேகமும், தெரிசனமும் சந்திரசேகர சுவாமி அருட்சத்தயாரோடு இடபாரூடராய் எழுந்தருளி, சுதபகாலத்தில் சித்தாமிருதசதில் தீர்த்தோற்சவம. மஹாயாக உத்வாசனமும் கும்பா அபிஷேகமும் இரவு துவஜா அவரோகணமும், நவசந்தி விசர்ஜனமும்.

திங்கட்கிழமை பகல் முன் மண்டபத்தில் அம்பாள் தபசு. பிற்பகல் நாலு மணிக்குச் சந்திரசேகரர் எழுந்தருளி திருவீதி உலா, இரவு 7 மணிக்கு கன்னி ஊஞ்சல், 8 மணிக்குத் திருக்கல்யாணம். பின் திருவீதி உலா.

செவ்வாய்க்கிழமை இரவு சண்டேசுரர் உற்சவம்.

புதன்கிழமை காலை (1-4-53) பகல் உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம்.

# வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்!

## குமரனைக்கொடுத்த கொடை வள்ளல்!

மறைக்காட்டுறையும் மணாளரைப் பாடப்புகுந்த அப்பர் சுவாமிகள் தம ஆராமை மிகுதியால் பதிகத்தின் முதற் பாட்டிலேயே "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்று போற்றித் துதித்தார். நாவரசர் அருளிய அடிகளில் வீழ்ந்த என் மனம் இவ்வடைத்தில் அப்பர் பெருமானின் அவ்வடியில் வீழ்ந்தது.

கைலயங்கிரியில் தக்ஷிணாவடபீடின் பக்கலில் நின்ற கல்லாலவிருக்ஷ நீழலில் சனகன் சநந்தனர் சனற்குமாரர் முதலாகிய நான்கு முனிவர்களுக்கும் மறைகள் மூன்று பாதங்களின் பொருளை நன்கு விளக்கிப் தலைவராகிய சிவபெருமான் நான்காம் பாதமாகிய ஞான பாதத்தின் பொருள் உத்தமனைத் தன்று விளக்குதற்கு ஆச் செயலிற் காட்டவேண்டியிருந்ததால் மன்த்தையடக்கி மௌனமாக இருக்கும் வண்ணம் தம மோனமுத்திரையைக் காட்டி மௌனத்தில் ஆழ்ந்தனர். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்னும் முதுமொழிக்கிணங்க அகில உலகமும வெளிசசென்றிருந்தது. கொடிய சூரபன்மனால் நூற்றுக்கு மேற்பட்ட யுககாலமாக அலைப்பட்டுக்கொண்டிருந்த தேவர் கூட்டம் தலைவரின் மௌனத்தைக்கண்டு நடுங்கியது. இமயமலை அரசனின் புத்திரியாகிய பார்பதி தேவியரைத் தலைவர் திருமணஞ் செய்து தரும் குமரனைக் கொண்டு தாந்துயர் நீங்கப்பெறலாம் என்றிருந்த அத்தேவர் கள்கூடித் தலைவரின் மௌனத்தைக் கலைப்பதற்குச் சூழ்ச்சி செய்தனர். ஆத்திரகாரனுக்கு புத்திமட்டு என்றபடி தமயட்டான புத்திக்கிணங்க மனஞ் சற்றுமில்லாத மன்மதனைத் தூண்டினர். தலைவராகிய சிவபெருமான் முன்சென்று சாதலே துணிபாகவும் பேறாகவும கொண்ட மன்மதன் தான் செல்வதைச் சிறிதும் பொருட்படுத்தாது தன்னைப் பின்தொடர்ந்து வரும் இரதிதேவியுடன் கைலையையணுகினன். மனத்தாலும் அளப்பரிய பெருமானது மௌனத்தின் ஆழத்தை ஒரு சிறிது உன்னினன் தளர்ந்தான, செய்வதியாதென தத்தைத்து நின்ற அவன் மனதில் கடமையைச் செய்வேன் வருவது வரட்டும், என்று நேசங்கொற்றும், கருப்பம் வில்லினின்றும எழுந்த மலர்க்கணை தலைவரை அணுகிறது. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் நெற்றி நாட்டத்தூடாகப் புறப்போந்த அக்கினிக கணை மன்மதனது அழகிய மேனியைப் பொடியாக்கிறது ஆதிகையற செய்தினன், தேவர் பதைத்து வீழ்ந்தனர் வேண்டுவார் வேண்டுவதே ஈவானுகிய தலைவராகிய சிவபெருமானைச் சூழ நிகழ்ந்த இந்நிகழ்ச்சியில் சனகாதி முனிவர்கள் தாம் வேண்டியதை ஐயந்திரிபுற முறைப்படி பெறுக் கொண்டனர் என்பது உண்மையே. தான் வேண்டாதும் அடியோரைக் காக்க வேண்டியும் சென்ற மன்மதனுக்கு வேண்டியதைத் தலைவர் ஈந்தாரா? நூற்றின் மேம்பட்ட யுககாலமாக அல்லற்படுகுழியில் அழுந்திக்கிடக்கும் தேவர்கள் வேண்டிக் கேட்டதைத்தானும ஈந்தாரா? இரதி தேவியின கதியென்ன? என்றெல்லாம் வினுக்களை எழுப்பிச சிறிது அலசி ஆராயாது கொண்டு அப்பாலும் சிறிதே சரித்திரத்தை உற்று நோக்குவாம.

முனிவர் நால்வரும் தாம் வேண்டியதைப் பெற்றுக் கொண்ட பின்னர் தலைவர் தம மௌனத்தை நீக்கினர். வினையோரும் வேண்டியவற்றிற்குத் தான் தாம என்ன செய்ய வேண்டும் என்பது அவருக் கல்லவா தெரியும. தன்னை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருந்த இமயமலை அரசன் புத்திரியின் தவத்தைப் பரீட்சித்தனர். சப்த முனிவர்களையும் அழைத்து இமயமலை அரசனிடம சென்று திருமணம பேசிவரும்படி கட்டளை இட்டனர். கல்யாணம் முடிந்தது. தன்னை இத்துணைக்காலமும் பிரிந்திருந்த பார்ப்பதி தேவியார் தன்னை அடைந்திருந்த அவ்வமயத்தில் மன்மதனை அத்துணைக் காலமும் பிரிந்திருந்த இரதி தேவிக்கு அவன் வேண்டியாங்கு அம்மன்மதனை உருவம் பெற அருளினர். கைலயங்கிரியின்கண் சென்று குமரனை அருளினர். தேவர்கள் சிறை மீட்கபபட்டது. சூரபன்மன் பதம் பெற்றான். தெய்வயானை அம்மையாரும் வள்ளிநாயகியும் தம் தவத்தின் பயனும குமரக்கடவுளை அடைந்தனர்.

— (தொடரும்)

அளவைச் சிவனடியார்
வரைவது

## சைவசித்தாந்த முத்திநிலைத் தெளிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் "புறச்சமயங்கள் மோட்சத்தைக் கொடுக்கமாட்டா! அகச்சமயங்கள் தான் மோட்சத்தைக் கொடுக்கும்" என்று கூறியதை யொருவர் (புறச்சமய நெறி நின்றும) எனபதினற் காலாதீதத்திலுங் கொடுக்காதென்பது சரியாவென ஆட்சேபித்தார். ஆட்சேபனைக்கு இடமிருக்கிறது போலும? ... ... தெளிவிப்பாராக.

வண்ணை, **குமரன்.**
4-3-53.

[இத்தகைய வினுக்களும் விடைகளும் இக்காலத்தில் நன்மை பயவா இயல்பினவாகின்றனவே யெனினும் பேரறிஞர்களாகிய குறித்த சொற்பொழிவாளர்களும், அன்னவர் பிறரும் யாவருக்கும் தெளிவுண்டாக விளக்கம் கூறுவரென்றெதிர் பார்த்து இவ்வினுக்களை வெளியிடுகின்றோம். எம்முரை வேண்டியபோது தருதும். ப—ர்.]

# நோய் வாராது வாழ்தற்கு வழி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதே யில்லையாமாகலின், நாம வாத பித்த முதலிய நோய்களை யொழிக்க முயல்வதோடு இல்லாது, மலம், விட்சேபம், ஆவரண மென்பன வற்றையும் ஒழிக்கப் பெரிதும் முயலுதல் வேண்டும். இவை யொழியு மாயின் நாமெப்போதுந் துன்புறுவதே யில்லையாம்.

ஆனல் நம்முடைய மனத்தின் கண், மலம், விட்சேபம், ஆவரண மென்பன நிலை பெற்று சாட்சி செய்வதால், நாம் விருப்பையும் வெறுப்பையும் மோகத்தையும் அடிக்கடி யடைந்து வருகின்றோம். இவ்வா றிருப்பதாற்றான் நாம் காயத்தால் பிறர் பொருளை யபகரித்தல் முதலியவற்றைச்செய்கின்றோம், வாக்கால் பொய் முதலியவற்றைப் பேசுகின்றோம்; மனத்தால் பிறர்க்குத் துரோகஞ் செய்தல் முதலியவற்றைச் சிந்திக்கின்றோம். இவையுள்ளவளவும் நாம் துக்கத்தின் தொடர்பில்லா திருப்பது சொப்பனத்து மில்லை. நாமேன் விருப்பையும் வெறுப்பையும் மோகத்தையும் மாறி மாறி யடைகின்றோம்? காயத்தால் பிறர்க்குபகாரஞ் செய்தலையும், வாக்கால இதமாயும் சத்தியமாயு முள்ள சொற்களைச் சொல்லுதலையும், மனத்தால் பிறவுயிர்களைக் கொல்லாமை முதலிய வற்றை நினைத்தலையு முடையவராகச் சிந்தனை செய்கின்றோமா வெனின், இல்லையென்பற்கு எவரேனும் வந்து சாட்சி கூற வேண்டியதில்லை. கல்லுண்ணு மொருவன் கல்லின் மயமாக விருப்பதுபோல, விருப்பு வெறுப்பு முதலியவற்றின மயமாக விருக்கும் நமக்கு இவைபற்றிச் சாட்சி கூறுவாரும் வேண்டுமோ? இவ்வா றிருக்கும் நமக்கு மல மென்பது இத்தன்மையது; விட்சேப மென்பது இத்தன்மையது; ஆவரண மென்பது இத் தன்மையது என்பன எவ்வாறு விளங்கும்?

மலமாவது சன்மார்த்தர்களிற செய்த பாபங்களின் ஏதுவாம். அது நம்முடைய மனதில் மிகு சூக்குமமாக, அ தாவது வாசனை அல்லது சம்ஸ்கார வடிவமாக இருக்கின்றது. அவ்வா றிருப்பதால் அது கடம்பட முதலியன போலப் பிரத்தியட்சமாய் அறிதற்குரியதாகா திருக்கின்றது; ஆனல் அஃது அனுமானத்தா லறிதற்குரியது, மலை முதலியவற்றில் புகையைக் கண்ட விடத்து, அங்கு நெருப் பிருக்கின்றதென்று அனுமானஞ் செய்வது போல, நம் மனத்தில் தீயவெண்ணங்களுண்

கோ. சுக்கி 4-ம் பக்கம்

## ∴ நீரர மங்கையர் ∴

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொதித்துக் குமிழிகள் கிளம்பிக்கொண்டிருக்கும் சேற்று நிலம் ஒன்றுக்கூடாக நெடுந்தூரம் செல்லல் வேண்டும். கடலின் அடியில் ஓர் அதிசயமான காட்டுக்கு நடுவில் சூனியக்காரியின் குடிசை இருந்தது. அக்காட்டிலுள்ள மாஞ்செடி ஒவ்வொன்றும் உருவத்திற் பாதி மிருகமும் பாதி தாவரமுமாய் இருந்தது. அவற்றை அரைமா என்று கூறுவர். பல பாம்புகள் தம்முடைய நூற்றுக் கணக்கான தலைகளை நிலத்திலிருந்து மேலே உயர்த்திக்கொண்டு இருப்பது போல் அவை தோன்றின. அவற்றின் கிளைகள் புழுப்போல் வளையக்கூடியன. அவை நீண்ட விரல்களையுடைய கைகள் போன்றிருக்கும். அன்றியும் ஒட்டிக்கொள்ளக்கூடிய பிசுபிசுப்புடையன. அடி தொடக்கம் நுனி வரைக்கும் எப்பக்கமும் வளையக்கூடியதன்மை அவைக்கிருந்தது. தமக்குக் கிட்ட வரும் பொருள் யாவற்றையும் தப்பியோடாதபடி பிடித்துச் சுற்றிக்கொள்ளும். ……
…………………… (வளரும்)

## அறிவித்தல்

வீரகத்தி கணபதிப்பிள்ளை ஆகிய எனது 4712023 - ஆம் இலக்கப் புருடென்சல் இன்சியூரன்ஸ் கம்பெனி உறுதி தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர் அல்லது இதற்கு உரிமை கொண்டாடுபவர் இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் "புருடென்சல் இன்சியூரன்ஸ் கம்பனி, தபால் பெட்டி 45. கொழும்பு - 1." என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும்.

இங்ஙனம்,
வீ. கணபதிப்பிள்ளை
ஆசிரியன்

"முருகன் அறிவகம்"
புலோலி தெற்கு
பருத்தித்துறை
1—3—53.
M 274 13 17—3—53.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அப்ப,

### கூட்டுறவுப் பிரசுராலயம்

காகிதம் எல்லாம் அச்சுவாகனமேறி நூல்கள் என்னும் பெயருடன் உலா வி வரும் நாளில், உண்மையான நூல்கள் வெளிவர வசதியில்லாமல் இருப்பது ஒரு பெருங்குறையாகும்.

நாவலர் வாழ்ந்த அழகிய பதிப்புகள் வெளிவந்த காலம் புராணக்கதையாகி வருகின்றது, யாழ்ப்பாண நாட்டில் — முன்னாளில் வெளிவந்த சைவ வினாவிடைக்கும் இப்போது புதினத்தாளில் அச்சடிக்கப் பட்டுவரும் சைவவினாவிடைக்கும் உள்ள வித்தியாசம் எம் மனதை வருத்துகிறது.

சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜமும் இத்துறையில் முன்னர் கட்டிய ஊக்கம் காட்டுவதாயில்லை. திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வியாபார நோக்கத்தையே பெரும் பாலும் கொண்டு தொழில் நடத்துவது போலத் தெரிகிறது. அன்றேல் அதன் பிரசுரங்கள் இவ்வளவு கீழ்நிலையுறுமா?

யாழ்ப்பாணம் சைவமும் தமிழும் அழியாது காப்பாற்றும் பணியில பங்கு கொள்ளுகிறது எனப் பெருமையுடன் பேசுவர் இத்துறையில் கவனஞ் செலுத்தி இங்கு ஓர் சிறந்த பிரசுராலயம் அமைக்க ஏற்பாடுகள் செய்வார்களாக. கூட்டுறவு முறையில் இதை ஆரம்பித்தால் அரசாங்கமும் உதவிசெய்யும். தேசிய மொழிகள் பிரதான இடம் வகிக்க வேண்டும் என்போர் இதன் மூலம் தமிழ் நூல்கள் பிரசுரிக்கலாம். சமய நூல்கள் இல்லையே, கிறீச்சுரவக நூல்கள் பரவுகின்றனவே என்று ஏங்குவோர் இதைத் தம் மெய்நெறிப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தலாம்.

உடலுக்கு உணவு கொடுப்பதிலும் பெரும் தொண்டு உயிர்க்கு உறுதுணையாகும் அறிவு விருந்து அளிப்பதே.

ஆ. சபாரத்தினம்.
நாரந்தனை,

## திருமுறையில் வரும்
# பட்டினத்தடிகள் யார்?

1-ம் பக்கத் தொடர்ச்சி

கையழகும் செயற்கையழகும் ஒருங்கே கொண்டு பக்கத்தூக் கிடந்து கொச்சைமொழி பேசும் அஞ்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும், ஒவியச்செய்கை நிரம்பிய பொற்கலத்து அறுசுவை அடிசிவிட்டு அதை யாங்கள்மட்டுமே உண்ணுது ஆடினர்க்கும் பாடினர்க்கும் வாடினர்க்கும் வரையாது கொடுத்துப் பின் உண்டும், பூசுவன பூசியும், புனைவன புனைந்தும், உடுப்பன உடுத்தும் இவ்வாறு இம்மை ஐம்புல இன்பமும் நிரம்ப நுகர்ந்து இருந்தோம் எனினும், மக்க மறுமை முத்தியும் இழந்தோமில்லை."

"இதன் காரணம், ஐந்தெழுத்தையும் வாயிடை மறவாது சிந்தை நின்வழி செலுத்தலேயாகும் இவ்வாறு பொறி புலன் அடக்கம் செய்யமாட்டாத எங்களுக்கு, உறுதியாக மறுமையின்பம் அளிப்பது உனக்கு இயல்பாக உள்ள பெருமைக் குணத்தின் மாட்சிமையே யாகும், நின் நாமமாய ஐந்தெழுத்தை சிந்திப்போர் இன்னே வழுவாதடைவர் என்பது மிக வருத்துவதன்றோ! வலியிக்க ஒருவன் தன்வலி முழுதும் கொண்டு வீசி எறியலாம்; மாட்டாதவன் மெல்ல எறியலாம். எனினும் இருவரும் வீசிய கல் நிலத்தையே வந்துறும், அதுபோலவே, மனமொழி மெய்யடக்கும் ஆற்றலுடையோரேயன்றி, அவ்வாற்றல் இல்லாரும் உனகரமும் கவிறுநின் இயல்பாகவே நுகரும் இம்மையின்பத்தோடு, மறுமையின்பமும் வழுவாது அடைவர்."

இவ்வாறு உணர்த்தியிருப்பதேயன்றி இன்னும் சிறப்பாகவும் அழுத்தமாகவும் வலியுறுத்தியிருப்பதைக் (கோயில் நான்மணிமாலை பா. 20) காணலாம்.

"தில்லைமூதூர் ஆடகப் பொதுவில் கடவுட்கண்ணுதல்கடம்முயன்றெடுத்த பாதப்போதும், பாய்புலிப்பட்டும் அதன்மீது இறுகக் கட்டியவெண்பல் அரவும், மார்பில் வெண்தலை மாலையும், அருள் பொதிந்து அலர்ந்த திருவாய் மலரும், நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும், கங்கை தங்கும் திங்களொளிர் சடையும் கண்ணிற் பொறித்து மனத்தில் அழுந்தி ஆங்கு உள்மகிழ்ந்துரைக்க உறுதவம் செய்தனன். இத்தகைய பெறுதற்கரிய பெருந்தவப் பேறு பெற்ற எனக்கு, நான்முகன் பதத்தின் மேல் கிழ்பதமாய சிவபதம் அரியதும் உண்டோ" எனப் பட்டினத்தார் வினக்க உணர்த்தியிருப்பது, இவ்வாறு யாவரும் தம்மைப் போல அப்பதம் பெறுதலுக்கேயன்றோ!

இத்தகைய செறிகிற்பார்க்கு இருவினையொப்பு முதலியன தாமே வந்துறும் என்ற உண்மையைக் கோயில் நான்மணி மாலையில் (பா. 26) "ஆனச் செல்வத்து வானேர் இன்பம் அதுவே எய்தினும் எய்துக; … நிரயம் சேரினும் சேர்க; … எனேர் எனனை நல்லன் எனினும் என்க; அலரே அல்லன் எனினும் என்க; … இன்பந் தழுந்தினும் அழுந்துக; அல்லாத் துன்பம் துதையினும் துதைக; … என்றும் இருக்கினும் இருக்க; அன்றி இன்றே இறக்கினும் இறக்க; ஒன்றிலும் வேண்டலும் இலனே; வெறுத்தலும் இலனே; ஆண்டகைக் குரிசில்! நின் அடியரொடு குழுமிய தெய்வக்கூத்தும் நின் செய்ய பாதமும், அடையவும் அணுகவும் பெற்ற இடையாச்செல்வம் கிடைத்தலானே" எனப் புலப்படுத்தியுள்ளார் பட்டினத்தடிகள்.

"எழுத்தைந்தும் ஓதுதல், உருத்திராக்கம் பூணுதல், திருநீறு பூசல் இன்றி இறைவன்கழல் மேவல் முடியவே முடியாது" என்பதைத் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் (பா. 12) அறுதியிட்டுரைத்திருத்தலுங் காண்க.

தற்கால நாகரிகத்தில் மயங்கியிருப்பார்க்கு இவையெல்லாம் மூடப்பழக்கத்தில் அடிமைப்பட்டோர் மேற்கொள்ளும் வீண்செயலாகக் காணப்படும். சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் பதினன்கு நூல்களுள் ஒன்றாய உண்மை விளக்கம் என்ற ஒரு நூலையேனும் ஓதினல், இவற்றின் உண்மை புலப்படும், நுண்ணூல்களுள் ஒன்றுமே பயிலாது, தம் மனம்போனவாறு கூறுவோர்க்கு இரக்கம் காட்டுவதன்றி யாம் வேறொன்றும் செய்வதற்கில்லை. கருவ நூற்பொருள் கேட்டு, ஆண்டவன் திருவடி அடைதற்காம் செயலாற்றும் தொண்டர் வாழ்வின் சிறப்பறியார். போலி யின்பங்களில் அழுந்தி அவற்றையே பெருமையாகக் கருதிப் பிறவிப் பயன்பெருது பெரிதும் ஏமாற்றம் உறுவர்,


# 'புதுவருடபஞ்சாங்கம்'

தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் பயனடையும் பொருட்டுக் குறைந்த விலையில் தெளிவாக விளங்கும் முறையில் மணி நிமிஷம் சேர்க்கப்பட்டது

விஜய வருஷ

## 'கலைமகள் வாக்கிய'
## பஞ்சாங்கம்
## ( 1953—1954 )

இப்பஞ்சாங்கம் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாச்சாரிய சுவாமியவர்களின் அங்கீகாரத்துடன் இட்டமொழி திரு. சிவசூரிய நாராயணபிள்ளை அவர்களால் சைவ அநுஷ்டானத்திற்கேற்ற முறையில் கணிக்கப் பெற்றது.

அழகான சரஸ்வதி படத்துடன் கூடிய முகப்பு

112 பக்கங்கள்

விலை 1க்கு சதம் 60
,, 12 ,, ரூபா 6. 00

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு

தனிப்பிரதி 70 சதம் முத்திரை அனுப்புக

வெளியிடுபவர்கள்
கலைமகள் கம்பெனி
போன்: 5950
124 செட்டியார் தெரு
கொழும்பு

யாழ்ப்பாணத்திலகிடைக்குமிடம்
T. தம்பித்துரை
226 ஆஸ்பத்திரி றேட்
யாழ்ப்பாணம்



# யாழ்ப்பாணம் ஐக்கியஸ்பந்தி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா,
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசுவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபை
## யாழ்ப்பாணம்

ஷை சபையினது ஒரு விசேஷ பொதுக் கூட்டம் நிகழும் பங்குனி மீ 9-ந் உ (22-3-53) ஞாயிற்றுக்கிழமை காலை 9½ மணிக்கு நீராவியடியிலுள்ள சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

### விஷயம்

1. விபூதி தரித்தல் — தேவாரம்
2. சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3. பிரேரணைகள்:

(அ) "சபை பிரசுரிக்கும் இந்துசாதன தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் நேரும் பண நஷ்டத்தைக் குறைப்பதற்காக, இவற்றை 1—4—53 தொடக்கம் 6 பக்கம் கொண்ட சிறந்த வாரப் பத்திரிகைகளாகப் பிரசுரிக்க வேண்டுமெனவும், ஆங்கிலப் பத்திரிகையை "The Ceylon Hindu" என்ற பெயரோடு பிரசுரிக்கவேண்டுமெனவும், இப்போதுக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

(ஆ) "வருங்காலத்தில் இலங்கை மாணவருக்கு என்ன மொழியில் எப்படிக் கல்வியூட்ட வேண்டுமெனச் சபைஆலோசித்துச் சபையின் அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும்.

(இ) இச்சபையின் பிரதிநிதிகள் உள்நாட்டு மந்திரியையும், தமிழ் மந்திரிகளையும் சந்தித்து அறநிலையப் பொருட் பாதுகாப்புச் சட்டத்தை விரைவில் அநுசரணைக்குக் கொண்டுவரும்படி கேட்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது."

4. வேறு விஷயம் 5 தேவாரம்.

யாழ்ப்பாணம்
11—3—53.

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி

குறிப்பு ☞ அங்கத்தவர் (1) தமது சந்தாவையும், (2) சபை ஆச்சிரம நாவலர் மண்டபக் கடன் நிவாரண நிதிக்குச் சேர்ந்த பணத்தையும் பணம் சேர்க்கத் தாம பெற்ற காகிதத்தையும் கூட்டத்திற்கு முன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இல்லற இன்பம் இனிதே அனுபவிக்க

பழனி, சி. எம். சாமி

அதிபலக் குளிகை

— உபயோகியுங்கள் —

அசதி, பலவீனம், தாம்புத் தளர்ச்சி முதலியவற்றை நீக்கி உடல் பலம், இந்திரியக்கட்டு, இன்ப சக்தி முதலியவற்றை உண்டாக்குகிறது! ஒரு முறை சோதியுங்கள்!!

60 குளிகை விலை ரூ 6-0-0.

ஏஜண்டு:— S. பொன்னுச்சாமி பிள்ளை,
133, தம்பகொடாதெரு, பலாங்கொடை.

தலைமை ஆபீஸ் (௬)
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.

கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்கமாளிகை இந்திப் பெருத்த ...

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= o =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

## நோய் வாராது வாழ்தற்கு வழி

3-ம் பக்கத்தொடர்ச்சி

...டாவதால் அங்கு மலமிருக்கின்றதென்று அனுமானஞ் செய்தறிதல் வேண்டும். காரணமின்றிக் காரியமுண்டாவது கூடாதன்றோ? நமது மனதின் கண் தீய வெண்ணங்கள் எழுதலால் இவற்றிற்குக் காரணம் இன்றியமையாதிருக்கவேண்டும். அக் காரணந்தான் மலமென்பது. நாம் அடிக்கடி பிறர்க்குத் துரோகஞ் செய்தல் முதலியவற்றை நினைப்பதற்குக் காரணம் மல மாயிருத்தலின் அதனைப் பிரயத்தன பூர்வமாக வொழிக்க நாம் பெரிதும் முயலுதல் வேண்டும். பாவமென்னும் இது நிஷ்காமகர்மம், பூததயை, ஈசுவர நாமோச்சாரண மென்பவற்றா லொழிவதாம். நிஷ்காமகர்மமாவது எந்தக் கருமத்தையும் பயனை விரும்பாது செய்தலாம், பயனை விரும்பாது கருமத்தைச் செய்பவன் மறந்தும் தீய கருமங்களைச் செய்வதில்லையாம். பயனை விரும்பிக் கருமங்களைச் செய்பவன்றான் தீயவற்றையுஞ் செய்ய முயலுகின்றான். பூத தயையாவது பிராணிகளிடத்துக் காருண்ய முடையவனா யிருத்தலாம். காருண்யமாவது தனக்குப் பயனை விரும்பாது பிராணிகளின் துக்க நிவிர்த்தியிலுண்டாகும் இச்சையாம். ஈசுவர நாமோச்சாரணமாவது ஈசுவரனது திருநாமங்களுள் ஏதனையாவது பக்தி பூர்வமாக இடைவிடாது பிறர்க்குக் கேளாதவாறு சொல்லிக்கொண்டிருத்தலாம்.

இம்மூன்றனுள் ஈசுவர நாமோச்சாரணம், மலத்தையே யன்றி விட்சேபத்தையுங் கெடுப்பது. விட்சேபமாவது — சித்தம் ஒருமுகப்படாதிருத்தல். நம்முடைய மனம் பட்டிமாடு போலத் திரியுமியல்புடையதென்பது வெளிப்படையான பொருள். மனம் ஒருமுகப்படாதிருத்தலென்னும் இவ் விட்சேபம் பெரியோர் கூறியவாறு ஈசுவரனைச் செவ்வையாகத் தியானஞ் செய்வதாலொழிவது. சற்குருவைத் தியானஞ் செய்வதனாலும் விட்சேப மொழியும். சற்குருமூர்த்தியைத் தியானஞ் செய்வது விட்சேபத்தையொழிப்பதற்குப் பரமசாதனம். சற்குரு பிரத்தியட்சக் கடவுளாதலின், அவரது தியானம் தியானங்களுள் தலைமையுடையது. தன்னை யுள்ளவாறறியாதிருப்பது ஆவரணம். இது தத்துவ ஞானத்தாலன்றிப் பிறிதொன்றால் ஒழிவதில்லை. நான் தூல சூக்கும காரணமென்னுஞ் சரீரத் திரயங்களுக்கு வேறாயிருப்பவன்; நான் சாக்கிர சொப்பன சுழுத்தி யென்னும் அவஸ்தாத் திரயங்களுக்குச் சாட்சி; நான் சச்சிதானந்த சங்கரவடிவனென்று சற்குரு கூறியவாறு சமாதி செய்து தன்னை யுள்ளவாறறிவதே தத்துவ ஞானம்.

நிஷ்காம கர்ம முதலியவற்றைச் செவ்வையாகச் செய்தவர்க்கு ஈசுவரத் தியானஞ் செய்தலும், ஈசுவரத் தியானத்தைச் செவ்வையாகச் செய்தவர்க்குத் தத்துவ ஞானமும் உண்டாமென்பது சாத்திரங்களின் முடிபும் சாதுக்களின் உபதேசமுமாயிருத்தலின், இனியேனும் நாம் நமமுடைய உடம்பின்கண்ணுள்ள 'வாத' 'பித்த' 'கப' மென்னுந் தோஷங்களை யொழிக்க முயல்வதுபோல, மனதின்கண்ணுள்ள மலம் விட்சேபம் ஆவரண மென்னுந் தோஷங்களையு மொழிக்கக் கருணாநிதியின் கருணையை முன்னிட்டு நம தாற்றலுக்கேற்றவாறு பெரிதும் முயலுவோமாக!

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1942ம் ஆண்டின் 13ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K K S ரோடு, பெ அரு. மு. முத்துச்சாமிசெட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:

| நம்பர் | உறிலு | கொடுத்த ரூபா | ஊர் பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|
| 2470 | 9 8-51 | 92 | மண்டதீவ வரம்பு இரத்தினலிங்கம் பொட்டு 1ம் சரஸ்வதி சேர்மானக் கல் வைத்த செடிவேலை செய்த பொட்டு | 1 |
| 2497 | 11 8-51 | 21 | கல்லூர் சின்னத்தம்பி வில்வலிங்கம் கைச் சங்கிலி | 1 |
| 2519 | ,, | 10 | ராசாவின்தோட்டம் குருநாதர் கலகரெத்தினம் தொங்கட்டானுடன் இமி. வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி | 1 |
| 2566 | 13-8 51 | 30 | நீராவியடி சின்னத்தம்பி ஜோஷ்நடேசன் பழுது சில கல்லில்லாத இமி. கல். அக்ஷரக்கூடு | 1 |
| 2601 | 15 8-51 | 30 | வண் மேற்கு ஓட்டுமடம் செல்லப்பா சின்னத்துரை தாலி | 1 |
| 2640 | 17-8-51 | 103 | காவாந்துறை கிறிஸ்தோ மருசலீன் இயேசுநாதர் பொட்டு கோர்த்த சங்கிலி | 1 |
| 2678 | 18 8 51 | 25 | சாவகச்சேரி சந்தையா இராமலிங்கம் இமி. கல். மோதிரம் | 1 |
| 2695 | 20 8-51 | 80 | காவாந்துறை அந்தோனிமுத்து சூசைப்பிள்ளை டையல் சங்கிலி | 1 |
| 2841 | 26-8-51 | 100 | சோனகதெரு பிச்சைக்குளம் ரோது சுல்தான் அப்துல்காதர் முலையதீன் சாங்கு பழுது முறிந்த சங்கிலி | 1 |
| 2869 | 27-8-51 | 115 | கச்சேரியடி டண்டியதாழ்வு முத்தையா மயில்வாகனம் கம்பிவளையல காப்புசோடி | 1 |
| 28 7 | 28 8-51 | 110 | காவாந்துறை கிறிஸ்தோ மருசலின் இமி வெள்ளைக்கல கொண்டைப்புரூச் 1ம டைசல் மோதிரம 1ம் இமி கல் மோதிரம் | 1 |
| 2948 | 30-8-51 | 100 | கைலாசபிள்ளையார்கோவில் மேற்கு வீதி இளையதம்பி வேலுப்பிள்ளை பழுது அக்ஷரகூடு | 1 |
| 2980 | 1 9-51 | 5 | கச்சேரியடி சக்காலேன் மாரிமுத்து சுப்பிரமணியம் சிறு ஆதென் மோதிரம் | 1 |
| 3058 | 4-9-51 | 45 | இணுவில் கிழக்கு வேலாயுதர் ஆறுமுகம் இமி கல் அக்ஷரக்கூடு 1ம் டை சிலக்கல் மோதிரம் | 1 |
| 3071 | ,, | 4 | ஓட்டுமடம் சின்னத்தம்பி மாணிக்கன் பழுது மட்டப்பொன் காட்டுக்கடுக்கன்ரோடி | 1 |
| 3135 | 8-9-51 | 165 | கந்தர்மடம் ரயில்வே ரோடு நாகமணி நடராசா சங்கிலி | 1 |
| 3137 | ,, | 50 | கவாலி வடக்கு சுப்பையா இராசையா கம்பி வளையல் பின்னைக்காப்பு சோடி | 1 |
| 3210 | 11-9-51 | 85 | கீர்வேலி வடக்கு மயில்வாகனம் வேலுப்பிள்ளை கம்பிக் காப்பு சோடி | 1 |
| 3319 | 18 9 51 | 17 | நாயன்மார்கட்டு மாணிக்கம் நடராசா திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1ம் திருகில்லாத டைசல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி | 1 |
| 3334 | 19 9-51 | 40 | மானிப்பாய் வடக்கு பொன்னையா அருமைத்துரை தாலி 1ம் குண்டு 1ம் திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி | 2 |
| 3347 | ,, | 70 | கல்லூர் பொன்னையா இராமசாமி தாலி 1ம் இமி வெள்ளை கீலம் கட்டிய தொங்கட்டான சோடி | 1 |
| 3485 | 21-9-51 | 15 | கந்தர்மடம் ரயில்வேரோடு நாகமணி நடராசா இமி வெள்ளை கீலம் கட்டிய தொங்கட்டான் சோடி | 1 |
| 3703 | 9-10-51 | 25 | அரியாலை கிழக்கு கார்த்திகேசு சுப்பிரமணியம் இறமல் கலர் மோதிரம் | 1 |
| 3727 | 10-10-51 | 21 | கொக்குவில் மேற்கு அய்யாத்துரை ராசகோபால் இமி. கல். மோதிரம் | 1 |

விற்பனவு: நந்தன ஹு பங்குனி மீ 22 உ (4-4-53) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படியார் கடையில் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை,
11—3—53.

சி. பசுபதிச்செட்டியார்
வேந்தீஸ்மேன்தர்.

M 275 13, 17—3—53,

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ஞுணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday March 17, 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org